| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார்) |

ந.க.எண்.000281/பி1/2023 நாள். 08.05.2024

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் – அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) அனைத்துப் பள்ளிகளும் ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள்– தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண். 14, பள்ளிக்கல்வித் (ஜிஇ.1)த் துறை நாள். 29.01.2018.

******

2023–2024 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் வருகிற 10.05.2024 **(வெள்ளிக்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு** வெளியிடப்படவுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலை/உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் 10.05.2024 **அன்று** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **காலை 10.00 மணி முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும், அதற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கான அனைத்துப் பள்ளிகளின் தேர்வு முடிவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை **10.05.2024 (வெள்ளிக் ழமை) அன்று காலை 10.00 மணிக்கு** தங்களது User-ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்

ஒம்/-
இயக்குநர்

<u>நகல்</u>
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.